# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

O.S.No.3063 of 2020

Deposition of witness for

DW1

Name : Tmt. R. Saradha

Husband's Name :

Age :

Address :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5th day January of 2026 .

05.01.2026

DW1 குறுக்கு விசாரணை

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

வாதி இந்த வழக்கை தாவா பாகம் கோரி தாக்கல் செய்திருக்கின்றார். தாவா சொத்தில் பிறந்தவர்கள் மொத்தம் ஐந்து நபர்கள். தாவா சொத்தின் அடிமனை என்னுடைய கணவருக்கு சொந்தமானது இல்லை என்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய சொத்திற்கு சொந்தமானது என்று சொன்னால் அது சரியல்ல. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அடிமனையை என்னுடைய மாமியாருக்கு ஒதுக்கி உத்தரவு பிறப்பித்தார்கள். அதன் பெயரில் என்னுடைய மாமியார் மேற்படி அடிமனையை என்னுடைய கணவருக்கு கொடுத்தார். எனவே அந்த சொத்து என்னுடைய கணவருக்கு தான் சொந்தமானது என்னுடைய கணவர் பெயரில் அடிமனை உள்ளது என்பதற்கான ஆதாரங்களை என்னுடைய வழக்கறிஞரிடம் கொடுத்திருக்கின்றேன். என்னுடைய மாமியார் வீட்டு

பத்திரத்தை என்னுடைய கணவரிடம் ஒப்படைத்து அது உனக்கு தான் சொந்தம் என்று சொன்னார். அடிமனை சம்மந்தமாக கிரைய பத்திரம் ஏற்படாத பட்சத்தில் மேற்படி சொத்தில் என்னுடைய கணவரின் சார்பில் நானும் அவருடன் பிறந்தவர்களோ எந்த உரிமையும் கோர முடியாது என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

05.01.2026

III Addl. Judge.
III Addl. Court.